நிகழும் சுபகிருது வருடம் சித்திரை மாதம் 27 ஆம் நாள் (10.05.2022)
செவ்வாய்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்ற அவசரக் கூட்டப் பொருள்கள்

பொருள் எண். 1 :

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021இன்கீழ் ரூ.1000.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 20557/2020/இ3, நாள். 15.12.2020 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான நிதி ஒதுக்கீடு கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்)	சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ. இலட்சத்தில்)	நகராட்சி பங்களிப்பு (ரூ. இலட்சத்தில்)
1000.00	850.00	150.00

சிறப்பு சாலைகள் திட்ட நிதி ரூ.850.00 இலட்சம் TUFIDCO நிறுவனத்திடமிருந்து கடன் தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் சிறப்பு சாலைகள் திட்டத்திற்கான திட்ட நிதி ரூ.850.00 இலட்சத்தினை TUFIDCO, சென்னை நிறுவனத்திடம் 7.95 சதவீதம் வட்டி விகிதத்தில் கடனாக 10 ஆண்டுகளில் திருப்பி செலுத்தும் வகையில் பெற்றுக்கொள்ள நாமக்கல் நகராட்சிக்கும் TUFIDCO, சென்னை அவர்களுக்கும் இடையில் ஒப்பந்தப் பத்திரம் மேற்கொள்ளப்பட்டது. இதனை தொடர்ந்து முதல் கடன் தவணைத் தொகை ரூ.425.00 இலட்சம் TUFIDCO, சென்னை நிறுவனத்திடமிருந்து விடுவிக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. தற்போது இரண்டாவது தவணைத் தொகை ரூ.425.00 இலட்சம் விடுவிக்கக் கோரி கருத்துரு தயார்செய்யப்பட்டுள்ளது.

எனவே, சிறப்பு சாலைகள் திட்டம் 2020–2021இன்கீழ் மீதம் பெறப்படவிருக்கும் கடன் தொகையை 7.95 சதவீதம் வட்டி விகிதத்தில், 10 ஆண்டுகளில் திருப்பி செலுத்தும் வகையில் TUFIDCO, சென்னை நிறுவனத்திடமிருந்து கடன் தொகையினை பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 6959/2020/இ1)**

தீர்மானம் எண். : 47, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 2 :

நாமக்கல் நகராட்சியில் சாதாரண நகர்புற உள்ளாட்சித் தேர்தல்–2022க்கு அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் தேவையான வசதிகள் ஏற்படுத்துல் பணியை மேற்கொள்ள வேண்டியதின் அவசியம் கருதி தமிழ்நடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் – 1920 சட்டப்பிரிவு – 15இன்கீழ் ரூ. 8,78,774/– செலவினத்தில் திரு. சண்முகசுந்தரம், கரூர் அவர்களின் மூலம் பணியை மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண். 560/2022/இ1)**

தீர்மானம் எண். : 48, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 3 :

நாமக்கல் நகராட்சியில் சாதாரண நகர்புற உள்ளாட்சித் தேர்தல்–2022க்கு வாக்குச் சாவடி மையங்களில் வாக்குச் சாவடி அலுவலர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி மையத்திலும் மற்றும் வாக்கு பதிவு மையத்திலும் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துல் பணியை மேற்கொள்ள வேண்டியதின் அவசியம் கருதி தமிழ்நடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் – 1920 சட்டப்பிரிவு – 15இன்கீழ் ரூ. 8,75,000/– செலவினத்தில் வர்ஷா குரூப் ஆப் கன்ஸ்டரக்சன், நாமக்கல் நிறுவனத்தின் மூலம் பணியை மேற்கொண்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண். 561/2022/இ1)**

தீர்மானம் எண். : 49, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 4 :

நாமக்கல் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் (NNT) 2021–2022இன்கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள பங்களிப்புதாரர்களிடமிருந்து பங்களிப்பு தொகை பெறப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டது. இப்பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.27519–37/2021/பி2, நாள்.31.03.2022 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்	பணி விவரம்	மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)	அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்)	அரசு மானியத் தொகை (ரூ. இலட்சத்தில்)	பங்களிப்பு தொகை (ரூ. இலட்சத்தில்)	பங்களிப்புதாரர் விவரம்
1	நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 18 காவேட்டிப்பட்டி அருள் மகரிஷி நகர் முதல் குறுக்கு தெருவில் மண் சாலையினை தார் சாலையாக தரம் உயர்த்துதல். (Unicode no.051018R1195)	25.00	25.00	12.50	12.50	V. சத்தியமூர்த்தி & கோ, திருச்சி ரோடு, நாமக்கல்
2	நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 18 காவேட்டிப்பட்டி அருள் மகரிஷி நகர் இரண்டாவது குறுக்கு தெருவில் மண் சாலையினை தார் சாலையாக தரம் உயர்த்துதல். (Unicode no.051018R1196)	25.00	25.00	12.50	12.50	V. சத்தியமூர்த்தி & கோ, திருச்சி ரோடு, நாமக்கல்
3	நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 38 முல்லை நகர் ஸ்பெக்ரம் பள்ளி எதிரில் உள்ள பூங்காவில் செடிகள் நடுதல் மற்றும் நடைபாதை அமைத்தல் பணி.	25.00	16.55	4.55	12.00	Spectrum Builders, திருச்சிரோடு, நாமக்கல்.
4	நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 38 முல்லை நகர் ஸ்பெக்ரம் பள்ளி எதிரில் உள்ள பூங்காவில் கம்பிவேலி அமைத்தல்.	18.50	17.90	8.65	9.25	Spectrum Builders, திருச்சிரோடு, நாமக்கல்.

மேற்கண்ட செயல்முறைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண். 2641/2022/இ1)**

தீர்மானம் எண். : 50, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 5 :

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தெருவிளக்கு மின்கம்பங்களில் தற்போதைய வார்டு வரன்முறையின்படி திருத்தியமைக்கப்பட்ட வார்டு மற்றும் தெருக்களின் விவரங்களை குறிப்பிடப்படவேண் அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 1750/2022/இ1)**

தீர்மானம் எண். : 51, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 6 :

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான துறையூர் சாலை பாவலர் முத்துசாமி திருமண மண்டபத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்துள்ளது. அதனை அகற்றி புதிய டேங்க் பொருத்தவேண்டியதும், மண்டபத்தில் உள்ள மின்விசிறிகள் மற்றும் விளக்குகள், சேதமடைந்த மேற்கூரைகள் பழுதுபார்ப்பதும், மேலும் கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வண்ணப்பூச்சி பூச வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணியை மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 18.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2633/2022/இ1)**

தீர்மானம் எண். : 52, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 7 :

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான சின்னமுதலைப்பட்டி பள்ளியில் பள்ளி குழந்தைகளின் நலன்கருதி கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது.

வ. எண்.	பணி விவரம்	மதிப்பீடு ரூ. இலட்சத்தில்
1	சீர்மிகு வகுப்பறைகள் (Smart Class) அமைத்தல்.	9.80
2	கூடுதல் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல்.	7.80

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடுகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மேற்கண்ட பணியை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2632/2022/இ1)**

தீர்மானம் எண். : 53, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 8 :

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான கோட்டை உயர்நிலைப்பள்ளியில் பள்ளி குழந்தைகளின் நலன்கருதி கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது.

வ. எண்.	பணி விவரம்	மதிப்பீடு ரூ. இலட்சத்தில்
1	சீர்மிகு வகுப்பறைகள் (Smart Class) அமைத்தல்.	9.80
2	கூடுதல் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல்.	7.80

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடுகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மேற்கண்ட பணியை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2633/2022/இ1)**

தீர்மானம் எண். : 54, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 9 :

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான பரமத்தி சாலையில் அமைந்துள்ள பிரதான நீர்த்தேக்க தொட்டி மற்றும் அணியாபுரம் நீருந்து நிலையம் ஆகியவைகளில் அமைக்கப்பட்டுள்ள கேஸ் குளோரினேசன் பிளான்டில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணியை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத் தொகை ரூ.4.50இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2634/2022/இ1)**

தீர்மானம் எண். : 55, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 10 :

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட சேந்தமங்கலம் சாலை இரயில்வே மேம்பாலம் அருகில், கொசவம்பட்டி நான்கு ரோடு, குளக்கரை அம்மா உணவகம் எதிரில், மதுரைவீரன் கோவில் அருகில் மற்றும் திருச்சி சாலை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள உயர்கோபுர மின்விளக்குகளில் டைமர் சுவிட்ச் பழுதடைந்துள்ளால் அவற்றை பழுது நீக்கம் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.75இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2820/2022/இ1)**

தீர்மானம் எண். : 56, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 11 :

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரிலையன்ஸ் மற்றும் ஏர்டெல் நிறுவனத்தின் மூலம் OFC கேபிள் பதிக்கும் பகுதிகளில் சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது.

வ. எண்.	பணி விபரம்	மதிப்பீடு ரூ. இலட்சத்தில்
1	சந்தைபேட்டைபுதூர், கொண்டிசெட்டிப்பட்டி உள்ளிட்ட நகரின் மேற்கு பகுதியில் சாலை சீரமைக்கும் பணி.	9.80
2	இராமாபுரம்புதூர் உள்ளிட்ட நகரின் கிழக்கு பகுதியில் சாலை சீரமைக்கும் பணி.	9.00

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகைகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 2821/2022/இ1)**

தீர்மானம் எண். : 57, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 12 :

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, 2, 6, 7, 8, 9, 10, 17, 18 மற்றும் 19 ஆகிய 10 வார்டு பகுதிகளில் உள்ள பகிர்மான குழாய்கள், அடிக்குழாய்கள், பம்பிங் மெயின் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளில் சுழற்சி முறையில் பராமரிப்பு பணி ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற திர்மானம் எண். 50, நாள்.28.02.2022 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 29.04.2022அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. JP Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.25 சதவீதம் குறைவு
2. P&B Enterprises, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.30 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.25 சதவீதம் குறைவாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிட குறைவாகவும் சமர்ப்பித்த JP Construction, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண்.1113 /2022 /இ1)**

தீர்மானம் எண். : 58, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 13 :

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20, 21, 22, 23, 24, 25, 26, 36, 37 மற்றும் 38 ஆகிய 10 வார்டு பகுதிகளில் உள்ள பகிர்மான குழாய்கள், அடிக்குழாய்கள், பம்பிங் மெயின் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளில் சுழற்சி முறையில் பராமரிப்பு பணி ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற திர்மானம் எண்.51, நாள்.28.02.2022 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 29.04.2022அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு. ஸ்ரீதர்மூர்த்தி, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.30 சதவீதம் குறைவு

2. JP Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.35 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.30 சதவீதம் குறைவாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிட குறைவாகவும் சமர்ப்பித்த திரு. ஸ்ரீதர்மூர்த்தி, நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண்.1115 /2022 /இ1)**

தீர்மானம் எண். : 59, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 14 :

நாமக்கல் நகராட்சிக்கு மோகனூர் முதல் நாமக்கல் பிரதான நீர்த்தேக்க தொட்டிவரை அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சுழற்சி முறையில் பராமரித்தல் ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.54, நாள்.28.02.2022 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 29.04.2022அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு. எம். கிருஷ்ணமூர்த்திமணியன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.15 சதவீதம் குறைவு
2. திரு. பி. மணி, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.20 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.15 சதவீதம் குறைவாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிட குறைவாகவும் சமர்ப்பித்த திரு. எம். கிருஷ்ணமூர்த்திமணியன் நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண்.1114 /2022 /இ1)**

தீர்மானம் எண். : 60, அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 15 :

நாமக்கல் நகராட்சி திருச்செங்கோடு சாலையில் சந்தை முன்பகுதியில் உள்ள தற்போது திடக்கழிவுகளை தரம் பிரிக்கும் இடத்தினை சுத்தம் செய்து அப்பகுதியில் கம்பி வேலி அமைத்தல் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் முன்னனுமதியை பெற்று, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 06.05.2022அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. MPS Engineering Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.20 சதவீதம் குறைவு
2. திரு. கே.ஜி. சீனிவாசன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.22 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.20 சதவீதம் குறைவாகவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிட குறைவாகவும் சமர்ப்பித்த MPS Engineering Construction, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 5448 /2022 /இ1)**

தீர்மானம் எண். : 61, அனுமதிக்கப்பட்டது.

ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி